பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 02 திங்கட்கிழமை 16.05.2022 கதிர் 85

## மீண்டும் ஊரடங்கு!


**இன்று இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை**

நாடளாவிய ரீதியில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய இன்று இரவு 8 மணி முதல் நாளை அதிகாலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. ☞2

# தீர்வை வென்றெடுக்க ரணிலுடன் பேசுவோம்

## சம்பந்தன் தெரிவிப்பு



தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்ளக் கூடியவர்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. எனவே, அவருடன் பேச்சு நடத்தி, தமிழர் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். ☞2

## ரணிலைப் பிரதமராக்கியதன் பின்னணியில் டெல்லி இல்லை

### சம்பந்தனிடம் தூதுவர் எடுத்துரைப்பு



ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியதன் பின்னணியில் இந்தியா உள்ளது எனப் பலரும் கூறுகின்றார்கள். நாங்கள் அவ்வாறு எதுவும் மேற்கொள்ளவில்லை.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை ☞2

## 10 கட்சிகள் சுயாதீனக் குழு நிபந்தனையின்றி ஆதரவு

### ரணிலிடம் நேரில் உறுதியளிப்பு



புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளடங்கலான அரசுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி ஆதரவளிக்கப்படும் என்று 10 கட்சிகளின் சுயாதீனக் கூட்டணி அறிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், 10 கட்சிகளின் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று முற்பகல் நடைபெற்றது. ☞2

## சஜித் அணி உறுப்பினரின் வீட்டில் ராஜபக்ஷ வீட்டு நாய்

### விசாரணைகள் ஆரம்பம்; ஒருவர் கைது



ராஜபக்ஷக்களின் வீரகெட்டிய, இல்லம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது, காணாமல் போன நாய்க்குட்டி ஒன்று, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. அத்துடன், யுவதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வீரகெட்டிய பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் மகளே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தனது வீட்டின் முன் இருந்த ☞2

## கட்சித் தலைவர்களை இணைத்து தேசிய சபை

### பிரதமர் உறுதி என்கிறார் கம்மன்பில



நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித்தலைவர்களை இணைத்து தேசிய சபையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

- இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில ☞2

## ரணில் தலைமையிலான அரசின் நல்ல செயற்பாடுகளுக்கு ஆதரவு

### சஜித் அணி தீர்மானம்

நாட்டு நிலைமையைக் கருத்திற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசின் நல்ல செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

கட்சியின் எம்.பிக்களுக்கிடையில் இன்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்களை உள்வாங்கும் செயற்பாடுகள் நடந்தால் ஆதரவு வாபஸ் பெறப்படும் எனவும் அக்கட்சி அறிவித்துள்ளது.

# முள்ளிவாய்க்காலில் சாவடைந்த ஆன்மாக்களின் கர்மாவை துரோகமிழைப்பவர்களும் அனுபவிப்பர்

## நினைவேந்தல் செய்தியில் சரவணபவன் தெரிவிப்பு



முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் சிக்குண்டு சிதையுண்டுபோன ஆன்மாக்களின் கர்மா எப்படி எதிரிகளை பாடாய் படுத்துகின்றதோ அதேபோன்று அந்த ஆன்மாக்களுக்கு துரோகமிழைத்தவர்களையும், துரோகமிழைப்பவர்களையும் பாடாய்படுத்தும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 13ஆவது ஆண்டு நாளைமறுதினம் புதன்கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மூச்சுக்கூட விடமுடியாத ஒடுங்கிய நிலப்பரப்புக்குள் லட்சம் தமிழர்களை அடைத்து, அவர்கள்மீதுஎறிகணைகளையும், கொத்துக்குண்டுகளையும், பொஸ்பரஸ் குண்டுகளையும் பொழிந்து தள்ளி அழித்தொழித்தது அரச ☞2

## கட்சித் தலைவர்களை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

மொட்டுக் கூட்டணியிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் 10 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு இன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே உதய கம்மன்பில எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் 10 துறைசார் மேற்பார்வை குழுக்கள் நிறுவப்படும். அந்தக் குழுக்களில் அங்கம் வகிக்கலாம். அமைச்சுப் பதவிகளை ஏற்காத கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய வகையில் தேசிய சபை ஒன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

அத்துடன், விரைவில் வரவு - செலவுத் திட்டம் ஒன்றும் முன்வைக்கப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டார் - என்றார்.

## முள்ளிவாய்க்காலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதம். சிங்கள - பௌத்தம் ஊட்டிய போதையில் திளைத்து நின்று தமிழர்களை வேட்டையாடிய ஸ்ரீலங்கா அரசின் அந்தக் கொடூரத்தை இப்போது நினைத்துப் பார்த்தாலும் இதயம் கனக்கின்றது.

பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு சிங்கள தேசம் இப்போது துடிக்கின்றது. இதைவிடப் பன்மடங்கு வலியை - வேதனையை - துயரத்தை எம்மக்களும்தான் சுமந்து நின்றார்கள். உணவில்லை, மருந்தில்லை, உயிருக்கு உத்தரவாதமில்லை என்ற மரணத்தின் பாதையிலேயேதான் பயணித்தார்கள். எவரும் மனமிரங்கவில்லை. எந்த வல்லரசும் வளைந்து கொடுத்து எம்மவர்களை மீட்கவுமில்லை.

கற்பனைகூட செய்து பார்க்க முடியாத நவீன யுகத்தின் மிகப் பெரும் மனிதப் பேரவலம் நடந்தேறி 13ஆண்டுகளாகின்றன.

முள்ளிவாய்க்காலில் சாவை அணைத்துக் கொண்ட ஆன்மாக்கள் 13 ஆண்டுகளாக அழுதுகொண்டிருக்கின்றன. தங்களின் நீதிக்காய் ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஆன்மாக்களை மிஞ்சிய சக்தி எதுவுமில்லை என்பதை அவை இப்போது நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது நிதர்சனமாகிக் கொண்டிருக்கின்றது.

எந்த மக்கள் எங்களின் எதிரிகளைத் தூக்கிக் கொண்டாடினார்களோ அவர்களே எதிரிகளை இப்போது தூக்கி மிதித்துக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் அனுபவித்த மரண பயத்தையும் எதிரிகளுக்கு காட்டியிருக்கின்றார்கள். நாங்கள் பயந்து பயந்து பங்கருக்குள் பதுங்கியதைப்போன்று எதிரிகளையும் பதுங்க வைத்திருக்கின்றார்கள். எதிரிகளுக்கு தூக்குக் காவடி தூக்கியவர்களும் எங்கள் ஆன்மாக்களின் கர்மாக்களை எதிர்கொண்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த ஆன்மாக்கள் எந்த இலட்சியத்துக்காக - எந்தத் தாகத்துக்காக - தாயகத்துக்காக செத்து மடிந்ததோ அதைத் தூக்கியெறிந்து விட்டு, அந்த ஆன்மாக்களையே கூனிக்குறுக வைக்கும் மிக மோசமான துரோகமிழைப்பவர்களும் கர்மாவிலிருந்து தப்ப முடியாது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்போம் என்று கூறிக்கூறியே அதை மழுங்கடிப்பவர்களும், அந்த ஆன்மாக்களின் இலட்சியத்தை நீர்த்துப்போகச் செய்பவர்களும் இனிவரும் நாள்களில் கர்மாவை அனுபவிப்பார்கள்.

எந்தவொரு சமரசத்துக்குமிடமின்றி - விட்டுக்கொடுப்புமின்றி - கடைசிக் கணம் வரையில் - தமிழர்களின் சுதந்திரத் தாயகத்துக்காக மடிந்த அந்த ஆன்மாக்களுக்கு, நாமும் நேர்வழியில் - விசுவாசமாக - அவர்கள் மீது சத்தியம் செய்து நீதியையும், சுதந்திர தமிழர் தாயகத்தையும் பெற்றுக் கொடுப்பதற்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் உறுதிபூணுவோம். அந்த உறுதியைக் காப்பாற்ற எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்குத் தயாராகுவோம் - என்றுள்ளது.

## சஜித் அணி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாய்க்குட்டியை வீட்டுக்குக் கொண்டு வந்தேன் என அந்த யுவதி கூறிய போதிலும், கார்ல்டன் தோட்ட பாதுகாப்பு அதிகாரிகள் யுவதியைப் பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி ராஜபக்ஷக்களின் சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது, இந்த நாய்க் குட்டியை அந்த யுவதி எடுத்து வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

தாக்குதலுடன் அவர் தொடர்புபட்டுள்ளாரா என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

## ரணிலைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நேற்று சந்தித்துக் கலந்துரையாடிய போதே இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமாகவுள்ளது. ஓர் உறுதியா உறுதியான அரசு அமையப்பெற வேண்டும். அப்போதுதான் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியும். ஓர் உறுதியான அரசு அமையப்பெற வேண்டும் என்பதில் கரிசனை செலுத்தினோம். அதேவேளை, பிரதமராக ரணில் அல்ல வேறு யார் வந்தாலும் நாம் தொடர்ந்து பணியாற்றியிருப்போம் என்றும் இந்தியத் தூதுவர் அந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

## 10 கட்சிகள் சுயாதீனக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போதே அரசுக்கு ஆதரவளிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. எனினும், அமைச்சுப் பதவிகள் எதுவும் ஏற்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீர்வை வென்றெடுக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசு மேற்கொள்ளும் சகல நடவடிக்கைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என்பது இதன் மூலம் அர்த்தமாகாது. எனினும், மக்களின் நலனுக்காகவும், மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவை வழங்கும்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் அவர்களுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினோம். அவருக்கு வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினை குறித்து நன்கு தெரியும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு காண்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடாக இலகுவானது.

பலமான அரசைக் கட்டியெழுப்பிய பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பில் அவருடன் கலந்துரையாடி தீர்வு காணப்படும் - என்றார்.

## மீண்டும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

# பெற்றோல் ஊற்றித் தீயிட்டு எரித்து 40 புறாக்களைக் கொன்ற விசமிகள்

## யாழில் கொட்டடியில் ஈனச் செயல்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.16

யாழில் புறா வளர்ப்பில் ஏற்பட்ட போட்டி மனப்பான்மையால் நாற்பது புறாக்களிற்கு விசமிகள் பெற்றோல் ஊற்றி தீவைத்து எரித்துக் கொன்றிருக்கின்றார்கள்.

ஈவிரக்கமற்ற இந்த ஈனச் செயல் இன்று பகல் வேளையில் கொட்டடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ். நகரில் பூட்டுத் திருத்தும் தொழில் புரியும் ஒருவரது வீட்டில் இருந்த அனைவரும் வெளியே சென்ற சமயம் கூட்டிற்குள் ஒரு போத்தல் பெற்றோலை முழுமையாக வைத்துவிட்டு மேலும் ஒரு போத்தல் பெற்றோலை கூட்டைச் சுற்றி ஊற்றியுள்ளனர் விசமிகள்.

ஊற்றிய பெற்றோலிற்கு நெருப்பு வைத்த விசமிகள் தப்பியோடிய சமயம் தீ பரவி, கூட்டின் உள்ளே வைத்த பெற்றோல் போத்தலில் பட்டு, போத்தல் பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறி தீ மேலும் பரவியுள்ளது.

சத்தம் கேட்டுக் கூடிய அயலவர்கள் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபோதும் 40றக்கும் மேற்பட்ட புறாக்கள் தீயின் காரணமாக இறந்துவிட்டன. பத்துப் புறாக்கள் வரை தப்பியுள்ளன.

இந்த விசமத்தனமான செயல் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டபோது வீட்டில் பறவைகள் வளர்ப்பிற்கான முறையான அனுமதி பெறாமல் புறா வளர்ப்பு இடம்பெற்றமை காரணமாக முறைப்பாடு பதிவு செய்வதில் சிக்கல் இருந்ததாகக் கூறப்பட்டது.



காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சர்வதேச ஆயம் விசாரணை

நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள 'சர்வதேச மக்கள் ஆயம்' என்று சர்வதேச அமைப்பு இலங்கையின் 'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட விடயம் தொடர்பான தனது விசாரணைகளை கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்திருக்கிறது.

சர்வதேச ரீதியில் கட்டமைக்கப்பட்ட இந்த நீதிமன்றத்தின் முடிவுகள், தீர்ப்புகள் சட்டரீதியில் எவரையும் கட்டுப்படுத்தும் நியாயாதிக்கம் கொண்டவை அல்ல என்றாலும், அதன் தீவிர விசாரணை அறிக்கைகள் உண்மைகளை வெளிக்கொணரும் ஆவணங்களாக மதிக்கப்படுபவை. சர்வதேசரீதியில் புகழ்பெற்ற நடுநிலையாளர்களையும் சட்டவாளர்களையும் துறைசார் நிபுணர்களையும் நீதிபதிகளின் அணியாகக் கொண்ட மக்கள் ஆயத்தில் முடிவுகள், சர்வதேச தாக்கத்தை ஏற்படுத்த வல்லன. அந்த ஆயம் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை புலனாய்வு மற்றும் நீதி விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது.

இலங்கையில் மேற்படி படுகொலை தொடர்பான விசாரணை விவரங்களும் அறிக்கைகளும் மூடி மறைக்கப்பட்டுள்ள சூழலில், உண்மைகள் அம்பலப்படுத்தப்படாத நிலையில், அவை பற்றிய தனது விசாரணைகளை இந்த ஆயம் ஆரம்பித்திருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் அவரது சகோதரரும் இப்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராகவும் இந்த காலகட்டத்தில் ஊடகங்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரங்களில் சிவராம், நிமலராஜன், நடேசன், சுகிர்தராஜன், லஸந்த விக்கிரமதுங்க உட் பட பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர் பிரகீத் எக்னெலிகொட போன்ற பலர் வலிந்து காணாமலாக்கப்பட்டனர். கீத் நொயர் போன்ற பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுக் கொடூரமான சித்திரவதைகளின் பின்னர் தப்பினர்.

ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிராக அந்த இருண்ட யுக காலத்தில் நடத்தப்பட்ட எந்த வன்முறைக்கு எதிராகவும் நீதி, நியாயமான விசாரணைகள் நடத்தப்படாத சூழலில் இப்போது சர்வதேச மக்கள் ஆயம் லஸந்த விவகாரத்தில் பகிரங்க விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது.

2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, நல்லாட்சி அரசு வந்த போதும், தனது தந்தையார் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு பின்னால் புதைந்து கிடக்கும் உண்மைகள் வெளியே வரும் எனத் தாங்கள் எதிர்பார்த்தார்கள் என்றும், ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கு மாறாக அந்தக் கொலை பற்றிய இரகசியங்கள் மூடிப் புதைக்கப்பட்டன என்றும் குறிப்பிட்டு, அது தொடர்பில் லஸந்தவின் மகள் விசனம் தெரிவித்து சமர்ப்பித்த அறிக்கை வியாழனன்று விசாரணைகளின் ஆரம்பத்தில் முழுமையாக வாசிக்கப்பட்டது.

நல்லாட்சி காலத்தில் இந்த வழக்கைப் புலனாய்வு செய்தவரும் இப்போது உயிருக்கு அஞ்சி வெளிநாட்டில் தஞ்சம் புகுந்திருப்பவருமான குற்றப் புலனாய்வு பிரிவு இன்ஸ்பெக்டர் நிஷாந்த சில்வா ஆயத்தின் முன்னால் சாட்சியமளித்தார்.

'மிக்' விமானக் கொள்வனவு டீல் விவரங்களை லஸந்த அம்பலப்படுத்தியமையாலேயே அவர் கொல்லப்பட்டார் என்பது தமது விசாரணைகளில் தெரிய வந்ததாக அவர் சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

சர்வதேசரீதியில் ஊடக சுதந்திரத்திற்காகப் போராடும் மூன்று பிரபல அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த விசாரணைக்கான குற்றப் பத்திர முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளன.

ஊடகவியலாளர் எக்னலிகொடவின் மனைவி, லஸந்தவுடன் பணியாற்றிய சக ஊடகவியலாளர் டில்ருக்ஷி ஹந்துனெற்றி, ஊடகவியலாளர் பாண அபேவர்த்தன உட்படப்பலர்சாட்சியமளித்துவருகின்றனர். ஆயத்தின் தீர்ப்பு ஜூன் மாதத்தில் வெளியாகி சர்வதேச பரபரப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது




## குமுதினிப் படகு படுகொலையின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம்

குமுதினி படகுப் படுகொலையின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ். நெடுந்தீவில் அனுஷ்டிக்கப்பட்டது.

குமுதினிப் படகுப் படுகொலையில் கொல்லப்பட்ட மக்களுக்காக நேற்று காலை 7.45 மணிக்கு நெடுந்தீவு புனித சவேரியார் ஆலயத்தில்திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டது.

நெடுந்தீவு இறங்கு துறையில் அமைந்துள்ள குமுதினி படகுப் படுகொலை நினைவாலயத்தில் நேற்று காலை 11 மணியளவில் உயிரிழந்தவர்களிற்கு சுடரேற்றி மலரஞ்சலி செய்யப்பட்டுநினைவஞ்சலிசெலுத்தப்பட்டது.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் குமுதினி படகு பயணித்துக் கொண்டிருந்த வேளை இலங்கை கடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள்து பெண்கள், முதியவர்கள் என 36 பேர் வெட்டி படுகொலை செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

படுகொலை செய்யப்பட்ட மக்கள் ஞாபகார்த்தமாக சூழகம் அமைப்பால் வழங்கப்பட்ட மரங்கள் நெடுந்தீவில் நாட்டப்பட்டதுடன் பொதுமக்களுக்கு மரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்களும் சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

## கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக வெசாக் அலங்காரங்களுக்குத் தட்டுப்பாடு

இந்த ஆண்டு வெசாக் கொடி மற்றும் வெசாக் அலங்காரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெசாக் கொடி விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு கொவிட் 19 தொற்று பரவிய போதிலும் வெசாக் கொடிகள் மற்றும் அலங்காரப் பொருள்களுக்கு அதிக கிராக்கி இருந்ததாகவும், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வெசாக் கொடிகள் மற்றும் அலங்காரங்கள் மற்றும் மெழுகுவர்த்திகளின் அதிக விலையால் தங்களது வியாபார நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன எனவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

வெசாக் தயாரிக்கப் பயன்படும் வண்ண காகிதம் உள்ளிட்ட பல மூலப்பொருள்களின் விலை அதிகரித்துள்ளதால் வெசாக் கூடுகள் ரூ.250 முதல் ரூ.350 வரை விற்பனை செய்ய வேண்டியுள்ளதாக வெசாக் கூடு விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், சிறிய மெழுகுவர்த்தி ரூ.20 இற்கும், பெரிய மெழுகுவர்த்தி ரூ.75 இற்கும் விற்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஆஸ்திரேலியாவில் கோட்டாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கிழித்தெறியப்பட்ட முள்ளிவாய்க்கால் துண்டுப்பிரசுரங்கள்!

ஆஸ்திரேலியாவில் மெல்பேர்ன் நகரில் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிராக இலங்கையர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இந்த போராட்டத்தின் போது தமிழ் மக்கள் மே 18 நினைவேந்தல் நாளை முன்னிட்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மத்தியில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளனர். இவ்வாறு விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் கிழித்தெறிந்துள்ளார்.

## எரிவாயுவை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைந்தது

எரிவாயுவை தாங்கிய இரண்டு கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதில் ஒரு கப்பல் இன்று நாட்டை வந்தடையவுள்ளதாக லிற்றோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதில் 3,700 மெற்றிக் தொன் சமையல் எரிவாயுகள் அடங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டாவது எரிவாயு கப்பல் எதிர்வரும் வியாழக்கிழமை நாட்டுக்குவருமெனவும்எதிர்பார்க்கப்படுகிறது

எனினும், வீட்டுத் தேவைகளுக்கு வழங்குவதற்கு எரிவாயு இல்லாத நிலையில் மக்கள் வரிசையில் நிற்பது அபத்தமானது என லிற்றோ கபஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## ரயில் தடம்புரண்டதில் போக்குவரத்து பாதிப்பு

ரயில் ஒன்று தடம் புரண்டதால் பிரதான வீதியில் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

ரம்புக்கணை மற்றும் கடிகமுவ ரயில் நிலையங்களுக்கு இடையில் இன்று காலை குறித்த ரயில் தடம் புரண்டுள்ளது. கண்டியில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த ரயில் ஒன்றே இவ்வாறு தடம் புரண்டுள்ளது. அண்மையில் எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயில் தடம் புரண்ட அதே இடத்தில் இந்த ரயிலும் தடம் புரண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, உடரட்ட ரயில் வீதியில் பயணிக்கும் அனைத்து ரயில்களும் ரம்புக்கணை ரயில் நிலையத்தில் தற்காலிகமாக நிறுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க சூப்பர் மார்க்கெட்டில் துப்பாக்கிச் சூடு; 10 பேர் சாவு





அமெரிக்காவில் சூப்பர் மார்க்கெட்டில் 18 வயது இளைஞர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 10 கொல்லப்பட்டனர். அமெரிக்காவின் நியுயோர்க் மாகாணத்தில் உள்ள பப்பல்லோ நகரில் கறுப்பினத்தவர்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் பெரிய சூப்பர் மார்க்கெட் உள்ளது. பல்பொருள் அங்காடியில் துப்பாக்கியுடன் நுழைந்த மர்ம நபர் கண்மூடித்தனமாக நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டனர். இவர் நடத்திய தாக்குதலில் மொத்தம் 13 பேர் காயமடைந்தனர். அவர்களில் 11 பேர் கறுப்பினத்தவர்கள். பலியான 10 பேரை தவிர மற்ற 3 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தாக்குதல் நடத்தியவர் 18 வயது இளைஞர். கான்க்ளின் பகுதியைச் சேர்ந்த இவருடைய பெயர் பேட்டன் ஜெனட்ரோன். எதற்காக தாக்குதல் நடத்தினார் என்பது குறித்து அவரிடம் விசாரணை நடந்து வருகிறது. முதல் கட்ட விசாரணையில் இது இனவெறி தாக்குதல் என்பது தெரிய வந்துள்ளது. இந்தச் சம்பவத்தை வெறுப்புணர்வு குற்றமாகவும், இன ரீதியாக நடத்தப்பட்ட வன்முறை தீவிரவாதமாகவும் கருதி விசாரித்து வருவதாக அமெரிக்க புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது. அமெரிக்காவில் ஆயுதங்களை வைத்திருப்பது மக்களின் அரசியலமைப்பு உரிமைகளில் ஒன்றாகும். இதனால், துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. இந்தியர்களும் அவ்வப்போது கொல்லப்பட்டு வருகின்றனர்

## உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள நிலையில் நேட்டோவில் இணைய பின்லாந்து விண்ணப்பம்

### மின்சார விநியோகத்தை நிறுத்தியது ரஷ்யா





ரஷ்யா-உக்ரைன் இடையே போர் நடந்து கொண்டிருக்கும் நிலையில், நேட்டோ அமைப்பில் சேர விண்ணப்பிக்க போகிறேன் என பின்லாந்து அதிபரும், பிரதமரும் கூட்டாக அறிவித்து உள்ளனர். ஐரோப்பிய யூனியன் ஒன்றியத்தில் 27 நாடுகள் உள்ளன. நேட்டோ கூட்டமைப்பில் 31 நாடுகள் உள்ளன. தற்போது, நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக நேட்டோ அமைப்பில் சேர ஆர்வம் காட்டி வருகின்றன. குறிப்பாக, ரஷ்யாவின் எல்லைக்கு அருகில் உள்ள உக்ரைன், பின்லாந்து, சுவீடன் போன்ற நாடுகள் நேட்டோவில் இணைய விருப்பம் தெரிவித்து வருகின்றன.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள ரஷ்யா, தற்போது உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ம்திகதி முதல் போர் தொடுத்துள்ளது. இந்த சூழலில், ரஷ்யாவின் கடும் எச்சரிக்கையும் மீறி, நேட்டோ அமைப்பில் உறுப்பினராக விண்ணப்பிக்க போகிறேன் என பின்லாந்து அதிபர் சவுலி நினிஸ்டோவும், பிரதமர் சன்னா மரினும் நேற்று கூட்டாக அறிவித்தனர். இதற்கான விண்ணப்பம் பிரஸ்சல்ஸில் உள்ள நேட்டோ தலைமையகத்தில் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். ரஷ்யாவின் அச்சுறுத்தல் காரணமாக, தனது நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஐரோப்பிய நாடுகள் பல வரிசையாக நேட்டோ அமைப்பில் சேர விருப்பம் தெரிவித்து வருகின்றன. இதற்கிடையே, நேட்டோவில் சேர பின்லாந்து விண்ணப்பிக்க உள்ளதால், அவர்களுக்கு வழங்கி வந்த மின்சாரத்தை ரஷ்யா நிறுத்தி உள்ளது. இந்நிலையில், உக்ரைனில் நேற்றும் ரஷ்யா-உக்ரைன் படைகளுக்கு இடையே பல இடங்களில் கடுமையான சண்டை நடந்தது.

## வட கொரியாவில் 3 நாள்களில் 42 பேர் தொற்றால் உயிரிழப்பு



வட கொரியாவில் ஒரே நாளில் 3 லட்சம் பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகம் முழுவதும் கொரோனா தாக்கிய போதும், தனது நாட்டில் பாதிப்பு இல்லை என வட கொரியா கூறி வந்தது. ஆனால், கடந்த சில நாள்களாக இந்நாட்டில் கொரோனா அலை வீசி வருகிறது.

தினமும் பல லட்சம் பேர் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக, கடந்த 3 நாள்களுக்கு முன்பு தான் தனது நாட்டில் முதல் முறையாக கொரோனா தொற்று கண்டுபிடிக்கப்பட்டதாக அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்தார். ஒரு நோயாளியும் இறந்ததாக கூறி, நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பித்தார்.

ஆனால், கடந்த மாதம் இறுதியில் இருந்தே வடகொரியாவில் கொரோனா பரவி விட்டதாக நேற்று முன்தினம் தகவல் வெளியானது. கடந்த 12ம் திகதியில் இருந்து 3 நாள்களில் 8 லட்சத்து 20 ஆயிரத்து 620 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 42 பேர் பலியாகி உள்ளனர். இந்த நாட்டின் மொத்த மக்கள்தொகையே 2 கோடியே 60 லட்சம்தான். இவர்கள் யாரும் கொரோனா தடுப்பூசி செலுத்தவில்லை. இங்கு தேவையான மருத்துவ வசதிகளும் இல்லை. உடனடியாக தடுப்பூசி, மருந்துகள் வெளிநாடுகளில் இருந்து கிடைக்காவிட்டால் ஏராளமான மக்கள் பலியாவார்கள் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

### இந்தியாவில் தொற்று ஏற்ற, இறக்கம்

இந்தியாவில் கொரோனா தினசரி தொற்று எண்ணிக்கை ஏற்ற, இறக்கங்களை சந்தித்து வருகிறது.

நேற்று காலை 8 மணியுடன் முடிந்த கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் 2 ஆயிரத்து 487 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம், நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 31 லட்சத்து 21 ஆயிரத்து 599 ஆக அதிகரித்துள்ளது

24 மணி நேரத்தில் கொரோனா தொற்றுக்கு 13 பேர் பலியாகியுள்ளனர். மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 5,24,214 ஆக அதிகரித்துள்ளது.

### கர்ப்பப்பை வாய் புற்று நோய் மருந்து

பெண்களை அதிகளவில் தாக்கும் கர்ப்பப்பை வாய் புற்று நோயை தடுப்பதற்கான தடுப்பூசி தயாரிப்பதற்கு சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா (எஸ்.ஐ.ஐ) ஒன்றிய அரசின் மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் ஜெனரலிடம் அனுமதி கேட்டுள்ளது. இது குறித்து அந்நிறுவனத்தின் அதிகாரி கூறுகையில், 'உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் இந்த தடுப்பூசியின் 2 கட்ட சோதனை வெற்றிகரமாக முடிந்துள்ளது.

எனவே, இந்த தடுப்பூசியை தயாரித்து விற்பனை செய்வதற்கு அரசிடம் அனுமதி கேட்டுள்ளோம்,' என்று தெரிவித்தார். ஒவ்வொரு நாளும் இந்தியாவில் இருநூறு பெண்கள் கர்ப்பப்பை வாய் புற்றுநோயால் பாதிக் கப்படு கிறார்கள். வருடந்தோறும் ஏராளமானோர் இந்த புற்றுநோயால் இறக்கிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ரஷ்யாவுக்கு எதிராக தொடர்ந்து போரிட உக்ரைனுக்கு ராணுவ உதவி வழங்கப்படுமாம்

ரஷ்யாவுக்கு எதிராக தொடர்ந்து போரிட உக்ரைனுக்கு ராணுவ உதவி வழங்கப்படும் என நேட்டோ அமைப்பு அறிவித்துள்ளது. உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ம் திகதி முதல் போர் தொடுத்துள்ளது. கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் மாகாணத்தை பிடித்து தனி நாடாக அறிவிக்க, அது எடுத்து வரும் முயற்சிகளுக்கு உக்ரைன் ராணுவம் கடுமையான பதிலடி கொடுத்து வருகிறது. இதன் மூலம், ரஷ்ய படைகளின் முன்னேற்றமும், வெற்றியும் தடுக்கப்பட்டு வருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் நிதி மற்றும் ராணுவ உதவி அளித்து வருகின்றன. இந்நிலையில் ரஷ்யாவுக்கு எதிராக தொடர்ந்து போரிட உக்ரைனுக்கு ராணுவ உதவி வழங்கப்படும் என நேட்டோ அமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பேசிய நேட்டோ அமைப்பு தலைவர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க், உக்ரைன் படையினர் தங்களின் தாயகத்தை பாதுகாக்க தைரியமாக போரிட்டு வருகின்றனர். ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைன் வெற்றி பெற முடியும் என தெரிவித்துள்ளார். இது தொடர்பாக உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி வெளியிட்டுள்ள டுவீட் பதிவில் நமது தைரியம் உலகையே ஈர்க்கிறது. நமது இசை, ஐரோப்பாவை வென்றது. அடுத்த ஆண்டு உக்ரைன், யூரோவின் பாடல் போட்டியை நடத்தும் என குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஜம்மு காஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் உயிரிழப்பு



ஜம்மு – காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் நேற்று இந்திய பாதுகாப்பு படையினருக்கும் வன்முறைக் குழுவினருக்குமிடையே துப்பாக்கிச்சூடு நடைபெற்றதாகவும், இதில் பொதுமகன் ஒருவர் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து பலியாகினார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விளக்கமளித்துள்ளனர். சோபியானில் உள்ள துர்க்வாங்கம் மற்றும் லிட்டர் புல்வாமாவை இணைக்கும் பாலத்தின் அருகே இந்திய மத்திய பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸாரின் கூட்டு ரோந்துக் குழுவுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது.

துப்பாக்கிச் சண்டையின்போது துர்க்வாங்கத்தைச் சேர்ந்த பொது மக்களில் ஒருவரான ஷோயிப் அஹ் கனி என்பவர் காயமடைந்தார். இவர் அங்குள்ள மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் தார். இதற்கிடையே, சிறிது நேர தாக்குதலுக்குப் பின்னர், பயங்கரவாதிகள் அங்குள்ள பழத்தோட்டங்களுக்குள் மறைந்துவிட்டனர். இது குறித்து வழக்குப் பதிவு செய்து தாக்குதல் மேற்கொண்ட மர்ம நபர்களைத் தேடி வருகிறோம், என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பாதயாத்திரை செல்லும் ராகுல்காந்தி



இன்னும் இரண்டே ஆண்டுகளில் இந்தியா அடுத்த நாடாளுமன்ற தேர்தலை சந்திக்கிறது. அதை எதிர்கொள்வதற்கும், தொடர்தோல்விகளால் துவண்டு போய் உள்ள கட்சிக்கு புத்துயிரூட்டவும் ராஜஸ்தான் மாநிலம், உதய்ப்பூரில் காங்கிரஸ் 3 நாள் சிந்தனை அமர்வு மாநாட்டினை நடத்தியது. இந்த மாநாட்டின்போது பெருகிவரும் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் மற்றும் மத்திய அரசின் தவறான கொள்கைகள் குறித்து அடுத்த கட்ட போராட்டம் நடத்தி மக்களிடம் எடுத்துச் செல்வதற்கான வழிவகைகள் குறித்து ஆராயும் முக்கிய அமர்வு நடந்தது.

கட்சியின் தலைவர் சோனியா காந்தி தலைமையில் நடந்த இந்த அமர்வில் கட்சி பொதுச்செயலாளர்கள், மாநில காங்கிரஸ் தலைவர்கள், பல்வேறு மாநில சட்டசபை காங்கிரஸ் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தநிலையில், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நாடு முழுவதும் பாதயாத்திரை மேற்கொள்ள ராகுல் காந்தி திட்டமிட்டுள்ளார் என கூறப்படுகிறது. கட்சியைப் பலப்படுத்த அவர் முழுவீச்சில் களமிறங்குகிறார் என கட்சி வட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

இதனிடையே, காஷ்மீரின் புட்காம் மாவட்டத்தில் பயங்கரவாதிகளால் அரசு ஊழியர் ராகுல்பட் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் குறித்து மத்திய அரசை ராகுல்காந்தி கடுமையாகச் சாடியுள்ளார்.

இது தொடர்பான வீடியோவை தமது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள ராகுல், காஷ்மீர் பைல்ஸ் திரைப்படம் பற்றி பிரதமர் மோடி பேசுவதை விட, இந்த வீடியோவிற்கு பதில் அளிக்க வேண்டும், என குறிப்பிட்டுள்ளார்.





# கோதுமை உற்பத்தியாகும் மாநிலங்கள் மே 31வரை கொள்முதலைத் தொடர மத்திய அரசு அனுமதி

இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கோதுமையின் அளவு கடந்த இரு மாதங்களாக அதிகரித்துள்ளது. இதனால், இந்தியாவில் கோதுமை விலை நாளுக்கு நாள் உயர்ந்தபடி உள்ளதாகக் குறிப்பிட்டு, இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் கோதுமை ஏற்றுமதிக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்தது. இதற்கு காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்தது.

விவசாயிகளிடமிருந்து மத்திய அரசு போதுமான அளவு கோதுமையை கொள்முதல் செய்யத் தவறியதே இதற்கான காரணம் என்றும், சரியான அளவில் கொள்முதல் நடந்திருந்தால், கோதுமை ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்றும், காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் நிதி அமைச்சருமான ப.சிதம்பரம் தெரிவித்திருந்தார்

இந்த நிலையில், கோதுமை உற்பத்தி செய்யும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மே 31 ஆம் திகதி வரை, கொள்முதலைத் தொடருமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த நீடிக்கப்பட்ட காலம், விவசாயிகளுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், இது தொடர்பாக மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்கள் விடுத்த கோரிக்கைகளை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்தியப் பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட், ஹிமாச்சலப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், குஜராத், பீகார் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், 2022-23 ஆண்டுக்கான ரபி சந்தை பருவத்தில், மத்திய தொகுப்பின் கீழ் கோதுமை கொள்முதல் சீராக நடந்து வருகிறது என்று மத்திய அரசின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. முந்தைய பருவத்துடன் ஒப்பிடுகையில், மத்திய தொகுப்பின் கீழ் கோதுமை கொள்முதல் குறைவாக உள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14.05.2022 வரை, 180 லட்சம் மெற்றிக் தொன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 16.83 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்றும் இந்திய மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.



# தெலுங்கானா மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்குமென அமித்ஷா நம்பிக்கை

தெலுங்கானா மாநிலத்தில் பா.ஜ.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ‘பிரஜா சங்க்ராம யாத்ரா’ நிறைவு நாள் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உரையாற்றியிருந்தார்.

தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்பட்ட போது நீலு (தண்ணீர்), நிதுலு (நிதி) மற்றும் நியமகளு (வேலைகள்) என்று கே.சி.ஆர். (கே.சந்திரசேகர ராவ்) வாக்குறுதி அளித்ததை தெலுங்கானா மக்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அதில் ஏதேனும் நிறைவேற்றப்பட்டுள்ளதா? அந்த வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றுவோம். தண்ணீர், நிதி, வேலை போன்றவற்றைக் கொடுப்போம்.

விவசாய கடன்களை தள்ளுபடி செய்வோம் என வாக்குறுதி அளித்தீர்கள், 2 லட்சம் வீடுகள் தருவோம் என வாக்குறுதி அளித்தீர்கள். ஆனால், கொடுக்கவில்லை. ஒவ்வொரு தலித்துக்கும் 4 ஏக்கர் நிலம் கொடுப்போம் என கூறினீர்கள். ஆனால், கொடுக்கவில்லை. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு 100 கோடி ரூபா கூட ஒதுக்கவில்லை.

மத்திய அரசுத்திட்டங்களின் பெயரை மாற்றி, அதில் தனது மற்றும் தனது மகன் படத்தை வெளியிட்டு, மாநில மக்களை கே.சி.ஆர். ஏமாற்றுகிறார். அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று பா.ஜ.க. ஆட்சிக்கு வரும்.

பாதுகாப்பான மற்றும் வளமான தெலுங்கானா மாநிலம் உருவாக பா.ஜ.கவை மக்கள் தேர்வு செய்ய வேண்டும், என்று தனது உரையின் போது அமித்ஷா குறிப்பிட்டிருக்கிறார்.

# இந்தியப் பிரதமர் மோடி மே 26 இல் தமிழகத்துக்கு விஜயம் செய்கிறார்



வரும் மே 26 ஆம் திகதி சென்னையில் நடைபெறவிருக்கும் அரச விழாவில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் மோடி தமிழகத்துக்கு விஜயம் செய்யவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியத்தேசிய நெடுஞ்சாலைத்துறை சார்பில் சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்கவுள்ளார் அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

# கல்முனையில் பொலிஸாரின் வெசாக் தின விசேட நிகழ்வு







(ஏ.ஏல்.எம்.ஷினாஸ் )

கல்முனை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்திருந்த வெசாக் தின தன்சல விசேட சிறப்பு நிகழ்வு நேற்று பொலிஸ் நிலையத்தின் முன்பாக நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை ஸ்ரீ சுபத்திராம விகாராதிபதி ரண்முத்துக் கல சங்கரத்தின தேரர் வெசாக் தின நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பொதுமக்களுக்கு பொலிஸாரின் ஏற்பாட்டில் தன்சக குளிர்பானம் மற்றும் உணவு பண்டங்கன் வழங்கப்பட்டன. பொலிஸ் நிலையத்தின் பெண் மற்றும் ஆண் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து சிங்கள பக்தி பாடல்களை பாடினர். அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை. செனவிரட்ன பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்த நிகழ்வில், கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட வசதி குறைந்த மூவின மக்களையும் சார்ந்தவர்களுக்கு விசேட அன்பளிப்பு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக்க உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.வாஹிட், நிந்தவூர், காரைதீவு, சவளக்கடை, பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர்கள், கல்முனை பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஏ.எல். ஏ.வாஹிட் , பொலிஸ் நிலைய அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மூவின மக்களும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால் பேரணி இன்று கல்லடிப் பாலத்தில் தொடங்கியது

(க.கிருபாகரன்)

இனவிடுதலை வேண்டி வடக்கு–கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையிலான மக்கள் பேரணி இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து ஆரம்பமானது. மட்டக்களப்பு நகர், ஊறணி, செங்கலடி, வந்தாறுமூலை, சித்தாண்டி, வாழைச்சேனை, கதிரவெளி, வாகரையூடாக திருகோணமலை சிவன் கோவில் வளாகத்தை இன்று மாலை வந்தடையவுள்ளது.




இப்பேரணியில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களானபா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள், ஈரோஸ் ஜனநாயக முன்னணி உறுப்பினர்கள், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதப் பெரியார்கள், பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை எதிர்வரும் 18 ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ முருகன் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் காலை 9.00 மணிக்கு சுடர் ஏற்றி, அகவணக்கம் மற்றும் நினைவுச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கந்தளாயில் நேற்று 15 பேர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் பதினைந்துக்கும் அதிகமானோர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வீடுகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாரினால் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டு சந்தேகத்தின்பேரில்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என கைதானவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்து சமூக செயற்பாட்டாளரும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாவட்ட செயலாளருமான ரொஷான் அக்மீமன கூறியவை வருமாறு:–


திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரளவின் வீடு சேதமாக்கப்பட்டமை தொடர்பில் வாக்கு மூலம் வழங்குமாறு பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்படும் இளைஞர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் திருகோணமலையில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான அமைதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள். இக்கைதுகள் அரசின் சர்வாதிகாரத்தை வெளி காட்டுகின்றன.

நாட்டில் ஜனநாயகமான ஆட்சி ஒன்று அமைய வேண்டும் என இளைஞர், யுவதிகள் வீதிக்கு இறங்கி போராட்டத்தை முன்னெடுக்கும் இவ்வேளையில் இவ்வாறான கைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். –என்றார்.

## அம்பாறை வீரமுனையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி






முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வு இன்று நான்காவது நாளாக அம்பாறை வீரமுனையில் அமைந்துள்ள படுகொலை நினைவுத் தூபியடியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ், அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துசானந்தன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர். ஓகஸ்ட் 12, 1990 அன்று வீரமுனையில் சிறி லங்கா இராணுவம் மற்றும் மாற்று இனத்தவர்களால் 155 தமிழர்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அதையொட்டிய நினைவுத் தூபியிலேயே முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வு இடம்பெற்றது.





# வவுனியாவில் களைகட்டிய வெசாக் கொண்டாட்டம்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வெசாக் பண்டிகை வவுனியாவில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

மே மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தில் புத்தரின் பிறப்பு மற்றும் பரிநிர்வாணம் என்பவற்றை நினைவுபடுத்தி வெசாக் தினம் பௌத்தர்களால் முக்கிய ஒரு விழாவாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அதற்கமைவாக வவுனியாவிலும் நகரப் பகுதியில் அமைந்துள்ள போதிதட்சனராமய விகாரையை மையமாக கொண்டும் வெசாக் கொண்டாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

மாவட்ட செயலகம், பொலிஸ் நிலையம், அரச அலுவலகங்கள், நீதிமன்றம், சிறைச்சாலை என்பவற்றுக்கு முன்னால் வெசாக் கூடுகள் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன், வவுனியா நகரிலும் பௌத்த கொடிகள் பறக்க விடப்பட்டு வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

கண்டி வீதியில் அமைந்துள்ள போதிதட்சனராமய விகாரை மற்றும் அதன் முன்பாக வொசக் கூடுகள், புத்தரின் பரிநிர்வாண நிலைய வெளிப்படுத்தும் காட்சிகள் என்பன வைக்கப்பட்டுள்ளதுடன், வெசாக் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் அதிகளவிலானமக்கள்சென்றுவெசாக்கூடுகளையும், வெசாக் காட்சிகளையும் பார்வையிட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இதனால் வவுனியா நகரில் இருந்து போதிதட்சனராமய விகாரை வரையிலான ஏ9 வீதிப் பகுதி சன நெரிசல் மிக்கதாக காணப்படுவதுடன், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 2 ஆயிரத்திற்கும் அதிகமானோர் சீரற்ற காலநிலையால் பாதிப்பு

## பலர் இடம்பெயர்வு

நாட்டில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பு கருதி உறவினர்களின் வீடுகளில்தங்கவைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிக பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

அந்த மாவட்டத்தில் 13 பிரதேச செயலகப்பிரிவுகளில் 585 குடும்பங்களைச் சேர்ந்த 2,290 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ள எச்சரிக்கை காரணமாக 7 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் 3 தற்காலிக முகாம்களிலும், 373 குடும்பங்களைச் சேர்ந்த 1,362 பேர் உறவினர்களது வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதே போன்று களுத்துறை மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் பலத்த காற்றினால் 16 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் 82 வீடுகள் இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் காரணமாக குறித்த இரு மாவட்டங்களிலும் பல வீதிகளினூடான போக்குவரத்ததுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. அதற்கமைய இரத்தினபுரி – பாணந்துறை வீதி, கிரிஎல்ல – இடம்கொட வீதி, கலவானை – மத்துகம வீதி, இரத்தினபுரி –அலபான வீதி, களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை – அகலவத்தைவீதி, புளத்சிங்கள – பரகொட வீதி என்பவை வெள்ள நீரில் மூழ்கின.

இதேவேளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி வரை இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிக மழைவீழ்ச்சி பதிவாகியது. இரத்தினபுரி மாவட்டத்தின் கலவானை பிரதேசத்தில் 119.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதே போன்று மாத்தறை – பிட்டபெத்த பிரதேசத்தில் 77 மில்லி மீற்றர் மழை வீழச்சியும், கேகாலை – அரநாயக்க பகுதியில் 70 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சியான மழை பெய்யும் பட்சத்தில் களு கங்கை, கின் கங்கை மற் றும் நில்வள கங்கை ஆகிய வற்றில் நீர் மட்டங்கள் உயர்வடையக் கூடும் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓரிரு தினங்களுக்கு மேல், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும், மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மழை தொடரக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேலும் சப்ரகமுவ மாகாணம் மற்றும் கண்டி, நுவரெலியா உள்ளிட்ட மாவட்டங்களிலும் 150 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மேல் மாகாணத்திலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 40 – 50 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் பொது மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

# இலங்கை ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆஸ்திரேலியா, லண்டனில் ஆர்ப்பாட்டங்கள்

இலங்கையில், ஆட்சியாளர்களுக்கு எதிராக இடம்பெறும் அமைதிப் போராட்டங்களுக்கு சமாந்திரமாக வெளிநாடுகளிலும் இலங்கையர்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அதன்படி ஆஸ்திரேலியாவிலும், பிரித்தானியாவிலும் இலங்கையர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

ஆஸ்திரேலியாவின் நாடாளுமன்றம் அருகே கூடிய இலங்கையர்கள், இலங்கையிலிருந்து மோசடி குற்றச்சாட்டுக்களுடன் கூடிய அரசியல்வாதிகள் ஆஸ்திரேலியாவுக்கு தப்பி வருவதை அனுமதிக்கக் கூடாது எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்ததுடன் ஒரு லட்சம் கையெழுத்து சேகரிப்பு வேட்டையையும் ஆரம்பித்தனர்.

பிரித்தானியாவின் லண்டணில் கூடிய இலங்கையர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதன்போது அந்த ஆர்ப்பாட்டத்தில் இஸ்ரேலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் பலஸ்தீனியர்களும் இணைந்து 'கோட்டா கோ ஹோம்' என குரல் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டாஞ்சேனையில் ஒருவர் மீது கத்திக்குத்து

கொட்டாஞ்சேனை ஆர்மர் வீதி அடுக்குமாடி குடியிருப்புக்கு அருகில் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் ஆர்மர் வீதி அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 42 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதுடன், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் டீசலுக்கு நீண்ட வரிசையில் மக்கள்

நாட்டில் எரிபொருள் பற்றாக்குறையால் பொதுமக்கள் எரிபொருளுக்காக தொடர்ச்சியாக நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

வவுனியாவில் கடந்த 10 நாள்களாக டீசல் கிடைக்காத நிலையில் நேற்று ஒரேயொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதனால் நேற்று டீசலை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்துள்ளனர்.

உழவு டிராக்டர்கள் மற்றும் பஸ்கள் உட்பட டீசல் வாகனங்களுடன் சாரதிகள் யாழ். வீதி மற்றும் மன்னார் வீதியில் தரித்து நின்று எரிபொருளைப் பெற்றிருந்ததுடன், விவசாய தேவைக்காக டீசலை பெற்றுக்கொள்பவர்களும் காத்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.05.2022இல் வெளியிடப்பெற்றது.